# திருத்தங்கல் நகராட்சி

## சாதாரண கூட்டம்

நிகழும் ஸ்ரீவிளம்பி வருடம் ஆடி திங்கள் 15ம் நாள் **31–07–2018** ம் தேதி செவ்வாய்க்கிழமை காலை **11.00** மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் வைத்து சாதாரண கூட்டம் நடைபெறும்.

**முன்னிலை : திரு.எஸ். முகம்மது சாகுல் ஹமீது, எம்.இ.,**

திருத்தங்கல் நகராட்சி **தனிஅலுவலர்**

நாள் . 27–07–2018 **திருத்தங்கல் நகராட்சி**

**பொருள் எண் – 110**

இந்நகராட்சியில் பணிபுரியும் துப்புரவுபணியாளர் திரு. கா. காளிமுத்து **30.06.2018**ல் ஓய்வு பெறவுள்ளார். அன்னாரது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட் சிறப்பு சேமநல நிதி தொகையும் அதற்கான வட்டியும் மற்றும் நிர்வாக பங்குத் தொகையும் சேர்த்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு–**

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.1695/2018/சி1

**பொருள் எண்.**111

திருத்தங்கல் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அனுமதியற்ற மனைபிரிவு மனைகளை வரன்முறைபடுத்த அரசாணை எண். 78 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி த்துறை. நாள். 04.05.2017, அரசாணை எண். 172 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி த்துறை. நாள். 13.10.2017 ன் படி வரன்முறைப்படுத்த உத்திரவிடப்பட்டுள்ளது. இதற்கு தகுந்த கட்டணங்களை செலுத்தி அனுமதியற்ற மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்திக் கொள்ள விளம்பரம் படுத்த ஆகும் உத்தேசச் செலவினத் தொகை ரூ.50,000/–க்கு (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.123/2018/எப்1

**பொருள் எண்.**112

திருத்தங்கல் நகராட்சி 2018-2019-ம் ஆண்டு பொது நிதி திட்டத்தின் கீழ் வருடாந்திர பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள மன்றத்தில் நிர்வாக அனுமதி பெற தனி அலுவலர்/ ஆணையாளர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வேலையின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண் 1 முதல் 10 வரை உள்ள குடிநீர் குழாய்கள் பழுது பார்க்கும் வருடாந்திர ஒப்பந்தம் (பொருள்கள் உள்பட) பணி | 10.00 |
| 2 | வார்டு எண் 11 முதல் 21 வரை உள்ள குடிநீர் குழாய்கள் பழுது பார்க்கும் வருடாந்திர ஒப்பந்தம் (பொருள்கள் உள்பட)பணி | 10.00 |

மேற்காண் பணிகளை பொதுநிதித்திட்டம் 2018-19-ன் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் : 351 /இ1/2018)

**பொருள் எண் –113**

திருத்தங்கல் நகராட்சி பகுதியில் உள்ள இந்திரா நகர் மெயின் ரோட்டில் PVC குழாய்கள் பதிக்கப்பட்டு அப்பகுதி மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அப்பகுதியானது கடினப் பாறைகளாக இருப்பதால் குழாய்களில் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு குடிநீர் வீணாவதுடன் குடிநீர் விநியோகம் செய்யவதிலும் இடையூறுகள் ஏற்படுகின்றது எனவே பொதுமக்களின் குடிநீர் அவசர அவசியம் கருதி மேற்படி பழுதான PVC குழாய்களுக்கு பதிலாக GI பைப்புகள் பதித்து குடிநீர் விநியோகம் செய்ய ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.6.00 இலட்சம் (ரூபாய் ஆறு இலட்சம் மட்டும் ) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் : 2135/இ1/2018)

**பொருள் எண் – 114**

திருத்தங்கல் நகராட்சியில் அமைந்துள்ள அருள்மிகு நின்ற நாராயணப்பெருமாள் திருக்கோவில் ஆனி பிரம்மோற்சவ விழா - திருத் தேரோட்டம் ஆனி மாதம் 17-ம் தேதி 01.07.2018 ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறுவதனையொட்டி திருத்தேரோட்டத்திற்கு வருகை தரும் அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர்களை வரவேற்று தினத்தந்தி மற்றும் தினகரன் நாளிதழ்களில் விளம்பர அறிவிப்பு வெளியிட்டப்பட்டமைக்கான பட்டியல்கள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | நாளிதழின் பெயர் | பட்டியல் எண் | தொகை |
|---|---|---|---|
| 1 | தினத்தந்தி | MDU1819-0008955 | ரூ. 27890/- |
| 2 | தினகரன் | 3300089672 | ரூ.25771/- |

மேற்படி பட்டியல்களுக்கான தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் :1979/இ1/2018)

**பொருள் எண் –115**

திருத்தங்கல் நகராட்சி பகுதியில் உள்ள பெரியகுளம் கண்மாய் மற்றும் செங்குளம் கண்மாய் பகுதியில் பல்வேறு ஆழ்துளை கிணறுகள் மற்றும் மோட்டார்கள் உள்ளன அவற்றை இயக்குவதற்கு இந்நகராட்சியின் மூலம் பணியாளர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். இந்நிலையில் சிவகாசி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் வார்டு எண். 18 மற்றும் வார்டு எண்.19-ல் அமைக்கப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு குடிநீர்க்குழாய்கள் பதித்து குடிநீர் விநியோகம் செய்யவேண்டி பெரியகுளம் சம்ப் சாலை மற்றும் செங்குளம் கண்மாய்கரை சாலைகளில் குடிநீர் குழாய்கள் பதிக்கப்பட்டதன் காரணமாக மேற்படி சாலைகள் குண்டும் குழியுமாக உள்ளது. இதனால் மோட்டார்கள் இயக்க செல்லும் பணியாளர்களுக்கு பெரும் இடையூராகி குடிநீர் பணிகள் பாதிக்கும் நிலை ஏற்படுகின்றது. எனவே குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி சாலைகளை தற்காலிகமாக சீரமைக்கும் பொருட்டு மேற்காண் சாலைகளில் கிராவல் அடித்து சரிசெய்ய ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.4.00 இலட்சம் (ரூபாய் நான்கு இலட்சம்) மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் : 2077/இ1/2018)

**பொருள் எண் –116**

இந்நகராட்சி அலுவலக ஈப்பு வாகனம் TN67 P5158 **10,000** கி.மீ. மேல் இயக்கப்பட்டு விட்டதால் ஆயில் சர்வீஸ், செல்ப் மோட்டார் டீசல் டேங்க் அடைப்பு மற்றும் டைனமோ போல்ட் பழுதுபார்க்க வேண்டியுள்ளதால், அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ. **36,000/–**க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதிக்கலாம் வாகன பயன் அவசியம் கருதி முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோர அனுமதிக்கலாம்.

ந.க.எண். **2066/2018/**இ**1**

**பொருள் எண் – 117**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமுத சுரபி என்ற மகளிர் சுய உதவி குழு மூலம் **55** தற்காலிக மஸ்தூர் பணியாளர்கள் மூலம் கொசு ஒழிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவர்களுக்கான ஊதியம் மாவட்ட ஆட்சித்ததலைவர் விருதுநகர் அவர்களின் **2016–17**ம் ஆண்டு செயல்முறை உத்தரவில் கூறியுள்ளப்படி நபர் ஒன்றுக்கு நாளொன்றுக்கு ரூ. **185/–** வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் தற்சமயம் மாவட்ட ஆட்சித் தலைவர், விருதுநகர் அவர்களின் **2018–19**ம் ஆண்டிற்கான செயல்முறை உத்தரவில் தினக்கூலி நபர் ஒன்றுக்கு நாளொன்றுக்கு ரூ. **208/**ஆக உயர்த்தப்பட்டுள்ளது. (எண். ஏ**7/18069/2018** நாள். **24/07/2018**) எனவே **01/08/2018** முதல் நபர் ஒன்றுக்கு நாளொன்றுக்கு ரூ. **208/**வீதம் வழங்கவும் அதற்கான கூடுதல் செலவினம் தொகை ரூ. **3,10,000/**க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.**802/2018/**எச்**1**)

**பொருள் எண் –118**

இந்நகராட்சி எல்லைகுட்பட்ட பகுதிகளில் SKMS அக்ஷயா மகளிர் மன்றம் (17 நபர்கள்) புன்னகை மகளிர் மன்றம் (17 நபர்கள்) அமுதசுரபி மகளிர் மன்றம் (17நபர்கள்)மூலம் துப்புரவுப் பணி நடைப்பெற்று வருகிறது. அவர்களுக்கான ஊதியம் மாவட்ட ஆட்சித் தலைவர், விருதுநகர் அவர்களின் 2016–17ம் ஆண்டு செயல்முறை உத்தரவுப்படி நபர் ஒன்றுக்கு நாளொன்றுக்கு ரூ. 173/– வழங்கப் பட்டு வருகிறது. தற்சமயம் மாவட்ட ஆட்சித் தலைவர் விருதுநகர் அவர்களின் 2018–19ம் ஆண்டுக்கான செயல்முறை உத்தரவுப் படி நபர் ஒன்றுக்கு நாளொன்றுக்கு ரூ. 195/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது. (Roc.No.A7/18069/2018 நாள்.24.07.2018) எனவே 01/08/2018முதல் நபர் ஒன்றுக்கு நாளொன்றுக்கு ரூ. 195/–வழங்கவும் அதற்கான உத்தேச கூடுதல் செலவினத் தொகை ரூ. 2,70,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்பணடகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.498/2018/எச்1)

**பொருள் எண் – 119**

இந்நகராட்சி பகுதியில் தூய்மை இந்தியா திட்டத்தின் மூலம் குப்பைகளை தரம் பிரித்து வழங்குவது குறித்த விழிப்புணர்வு நோட்டீஸ் அச்சிடுவதற்கு அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ. 200000/க்கு நகர்மன்ற தீர்மான எண். 5 நாள். 31.01.2018ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி விழிப்புணர்வு நோட்டீஸ்M/S அரும்பாக்கம் ஸ்டேசனரி மற்றும் பிரிண்டிங் கூட்டுறவு சங்கம் சென்னை என்ற நிறுவனத்திடமிருந்து அச்சிட்டு பெற்ற வகையில் ரூ. 2,21,800/க்கு வரப்பெற்றுள்ளது. (No.97 dt. 23/07/18 No.98 dt. 23/07/2018) எனவே உத்தேச செலவினத் தொகையை காட்டிலும் பெறப்பட்டுள்ள கூடுதல் செலவினம் ரூ. 21,800/க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

1) கூடுதல் செலவினத்தை மன்றம் அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கியதையும் மன்றம் பின்னேற்பு வழங்கலாம்

(ந.க.எண்.122/2018/எச்1)

**பொருள் எண் – 120**

திருத்தங்கல் நகராட்சி 2016-2017 மற்றும் 2017-2018-ம் ஆண்டுகளில் நடைப்பெற்று வரும் பல்வேறு திட்டப்பணிகள் குறித்த விளம்பர அறிவிப்பு தினகரன் நாளிதழில் 04.05.2018-ம் தேதி அன்று KAL PUBLICATION (P) LTD, என்ற விளம்பர நிறுவனத்தின் மூலம் வெளியிட்டமைக்கு அந்நிறுவனத்திடம் இருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. Bill No.3300073910 தொகை ரூ.25,771/- ( இருபத்தி ஐந்தாயிரத்தி ஏழு நூற்றி ஏழுபத்தி ஒரு ரூபாய்) மட்டும் KAL PUBLICATION (P) LTD, நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு–**

அனுமதி அனுமதிக்கலாம்.

(ந.க.எண் : 1467/இ1/2018)

**பொருள் எண் – 121**

திருத்தங்கல் நகராட்சி பொதுநிதித்திட்டம் 2018-2019 ன் நகர் மன்ற தீர்மான எண் 65 நாள்.30.04.2018-ன் படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு கீழ்கண்ட பணிக்கு 26.07.2018-ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் விபரம் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தபுள்ளி விபரம் (%குறைவு & % கூடுதல்) |
|---|---|---|---|---|
| 1. | **திருத்தங்கல் நகராட்சி**<br>சின்டெக்ஸ் டேங்குகள் சப்ளை செய்யும் பணி | 2.00 | திரு. P.முருகன் திருத்தங்கல் | **1.25%** அதிகம் |
| | | | திரு. M.கண்ணன் மதுரை | **0.30%** குறைவு |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.30% குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு. M.கண்ணன் மதுரை அவர்களின் ஒப்பந்தபுள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் :1122/இ1/2017)

**பொருள் எண் – 122**

தமிழக முன்னாள் முதல்வர் கர்மவீரர் திரு.கே.காமராஜர் அவர்களின் 116-வது பிறந்தநாள் விழாவிற்கு வருகை தரும் மாண்புமிகு. தமிழக முதல்வர். எடப்பாடி திரு.கே.பழனிச்சாமி அவர்களையும் தமிழக அமைச்சர் பெருமக்கள், மற்றும் அரசு உயர் அதிகாரிகளை வரவேற்கும் விதமாகவும் இந்நகராட்சி வளர்ச்சி பணிகளுக்கு நிதிஒதுக்கீடு செய்து தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாகவும் தினகரன் மற்றும் தினத்தந்தி நாளிதழ்களில் விளம்பர அறிவிப்பு வெளியிட்டப்பட்டமைக்கான பட்டியல் வரபெற்றுள்ளது.

| வ.எண் | நாளிதழின் பெயர் | பட்டியல் எண் | தொகை |
|---|---|---|---|
| 1 | தினத்தந்தி | MDU1819-0010351 | ரூ. 23783/- |
| 2 | தினகரன் | 3300092863 | ரூ.25,771/- |
| 3 | மாலைதமிழகம் | MT0618/2018-19 | ரூ.25,000/- |

மேற்படி பட்டியல்களுக்கான தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது..

<u>அலுவலக குறிப்பு–</u>

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண் : 2215/இ1/2018)

**பொருள் எண் – 123**

நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 12503/2018/ஆர்1 நாள். 31.05.2018ன் படி 1.10.2018ம் இரண்டாம் அரையாண்டு முதல் (2018–2019 II)தொழில் வரி உயர்வு குறித்த அறிவிக்கையை 27.06.2018 தேதிய தினதந்தி நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டது. பிரசுரம் செய்யப்பட்ட நாளிலிருந்து 15 தினங்களுக்குள் ஆட்சேபனை கோரப்பட்டது. ஆட்சேபனை ஏதும் பெறப்படவில்லை எனவே 01.10.2018 முதல் தொழில் வரி உயர்வு குறித்த அறிவிக்கையை மாவட்ட அரசிதழில் வெளியிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**
மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண். (1452/அ1/2018)

**பொருள் எண் – 124**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே எண். 1769/1 கொண்ட சொத்து திரு. த. சௌந்திர பாண்டியன் என்பவரது பெயரில் உள்ளது. மேற்படி நபரின் பெயரில் புதிதாக காலியிட வரிவிதிப்பு விதிக்கப்படும் போது வார்டு எண். 3 குரூப் ஹவுஸ் காலனி என்ற தெருவிற்கு பதிலாக வார்டு எண்.05 பள்ளப்பட்டி ரோடு என தவறுதலாக வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே வார்டு மற்றும் தெரு மாறி தவறுதலாக காலியிட வரி விதிப்பு செய்யப்பட்ட காலியிட வரிவிதிப்பு எண்.131/005/01310–ஐ 01.04.2018 முதல் ரத்து செய்யவும் பத்திர பதிவுகளின் படி சொத்தின் உரிமைதாரரான திரு. த.சௌந்திர பாண்டியன் என்பவரின் பெயரில் சரியான வார்டு எண். 03 குரூப் ஹவுஸ் காலனி என்ற தெருவில் 858 சதுர அடிக் கொண்ட நிலத்திற்கு 01.04.2018 தேதி முதல் புதிதாக காலியிட வரிவிதிப்பு ஏற்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு–**
மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.585/2018/அ1

**பொருள் எண் – 125**

திருத்தங்கல் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் / திடக்கழிவு மேலாண்மை திட்டம்(2018–19), கீழ் நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் Bio mining Revamping அமைக்கும் பணியினை ரூ.301.00 இலட்சம் மதிப்பீட்டிற்கும், நகராட்சிக்கு சொந்தமான 4 இடங்களில் Micro Compost Centre அமைக்கும் பணியினை ரூ.308.40 இலட்சம் மதிப்பீட்டிற்கும் மற்றும் தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) 2018–19ன் கீழ் தார்சாலைபணிகள் ரூ.600.00 இலட்சம் மதீப்பீட்டிற்கும் அரசின் முழு மானியம் பெற்று செய்திட வரைவு திட்ட அறிக்கை (DPR) தயார் செய்யும் பணிக்கு 02.07.2018 அன்று வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>விலைப்புள்ளிகள் விபரம்</u>

<u>1.தூய்மை இந்தியா திட்டம் / திடக்கழிவு மேலாண்மை திட்டம் (2018–19) (</u>Bio mining Revamping)

1. பவித்ரா அசோசியேட்ஸ், சென்னை– 1.52% + GST 18%
2. புரோரேட்டா இன் புரப்போசன், சென்னை – 1.65% + GST 18%
3. டிசைன் ஸ்பெக்ட்ரம், சென்னை – 1.62% + GST 18%

2.தூய்மை இந்தியா திட்டம் / திடக்கழிவு மேலாண்மை திட்டம் (2018–19) micro compost centre

1. பவித்ரா அசோசியேட்ஸ், சென்னை– 1.60% + GST 18%
2. புரோரேட்டா இன் புரப்போசன், சென்னை – 1.72% + GST 18%
3. டிசைன் ஸ்பெக்ட்ரம், சென்னை – 1.78% + GST 18%

3. தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) 2018–19

1. பவித்ரா அசோசியேட்ஸ், சென்னை– 1.48% + GST 18%
2. புரோரேட்டா இன் புரப்போசன், சென்னை – 1.52% + GST 18%
3. டிசைன் ஸ்பெக்ட்ரம், சென்னை – 1.62% + GST 18%

அலுவலகக் குறிப்பு:

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள பவித்ரா அசோசியேட்ஸ், சென்னை அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் : 1384/2018/இ1

**பொருள் எண் – 126**

திருத்தங்கல் நகராட்சி திடக்கழிவு மேலாண்மைத் 2018-2019 (Solid Waste Management Scheme) திட்டத்தின் கீழ் இந் நகர் பகுதிகளில் Bio - Mining Revamping பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.301.00/- இலட்சம் (முன்னூற்று ஒரு இலட்சம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்து மேற்படி மதிப்பீட்டுத் தொகையை அரசு மானியமாக பெறுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கீழ்கண்ட விவரப்படி திட்டப் பிரேரணை தயார் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | திருத்தங்கல் நகராட்சியில் வார்டு எண். 02 மற்றும் 03 பேட்டைத் தெரு மற்றும் வார்டு எண்.21-ல் சிவகாசி - விருதுநகர் மெயின் ரோடு ஆகிய பகுதிகளில் Bio-Mining Revamping பணிகள் செய்தல் | 301.00 |
| | மொத்தம் | 301.00 |

**அலுவலகக்குறிப்பு:-**

2018-2019-ம் ஆண்டிற்கு திடக்கழிவு மேலாண்மைத் (Solid Waste Management Scheme) திட்டத்தின் கீழ் அரசு மானியமாக பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் : 1570/2018/இ1

தனிஅலுவலர்
திருத்தங்கல் நகராட்சி